[1986 மே 2

மார்க்கெட் தற்போது "ஜெய்ஹிந்துபுரம்" மெயின் வீதியில் இருக்கிறது. தற்போது சாலை ஓரங்களில் காய்கறிகளைப் பரப்பி வைத்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, அங்குள்ள மக்கள் பயன் பெறுகின்ற வகையில் ஒரு நவீன கட்டிடத்தை மாநகராட்சி மூலம் கட்டித் தந்து, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இல்லை என்று சொன்னேன். இதைப் பற்றி அரசு பரிசிலிக்கும்.

பட்டுக்கோட்டை நகராட்சி சேமிப்புக் கிடங்கு.

630—(*வினா எண். 7699)—**திரு. ப. ந. இராமச்சந்திரன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் நகராட்சி சேமிப்பு கிடங்கு கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) பட்டுக்கோட்டை நகர், காசாங்குளம் தென் கரையில் ச. எண். 26-ல் சுமார் 78 சென்ட் நிலத்தில் சேமிப்பு கிடங்கு கட்டும் பணி மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தமிழக அரசின் நகர் ஊரமைப்பு வாரியத்தினால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திட்டத்திற்கான நிதி உதவி கிடைக்கப் பெற்றவுடன் பணி துவக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையில் நகராட்சி சேமிப்பு கிடங்கு கட்டுவதற்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி. இதற்காக

1986 மே 2]

அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி கட்ட இருக்கின்ற அந்த சேமிப்புக் கிடங்கின் திட்ட மதிப்பீடு எவ்வளவு? அது எவ்வளவு காலத்திற்குள் கட்டப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ரூ. 80 இலட்சம் தேவை என்று கோரப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகராட்சிகளில் நகராட்சி அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் வாடகைக் கட்டிடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலகமும் அப்படித்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. அடுத்து, திருமணக் கூடங்கள் கட்டுவதற்கு, நகராட்சி அலுவலகங்கள் கட்டுவதற்கு அரசின் உதவியோ, கடன் வசதியோ செய்து தரப்படுவதில்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இப்படி சேமிப்பு கிடங்கு என்ற வகையில் நாம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்று அதிகாரிகள் சிரமப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றையதினம் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாடகை கட்டிடங்களில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையை மாற்றி நிரந்தரமாக பயனளிக்கும் வகையில் நகராட்சி கட்டடங்களையும், திருமணக் கூடங்களையும் ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிற அளவிற்கு கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாலை 4-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நகராட்சி அலுவலகங்களைக் கட்டுவதற்கு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் தர இயலாது. திருமணக் கூடங்களைக் கட்டுவதற்கு வேண்டுமானால் முயற்சிக்கலாம்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, நகராட்சியின் வருவாயைப் பெருக்குவதற்காக கடைகளையும், கூடங்களையும் கட்டி வருகிறோம். ஆனால் நகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் மார்க்கெட் பகுதியில் பல இடங்களில் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களில் கடைகள் கட்டுவதைப் பொறுத்தவரையில் நம்மிடம் பணம் இல்லையென்ற காரணத்தினால் ஓரளவிற்குத்தான் கட்டுகிறோம். பெருத்த அளவிற்கு கடைகள் கட்டி நகராட்சியின் வருவாயைப் பெருக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இந்த நிலையில் நகராட்சிக்குச் சொந்தமான இடங்களை ஏலம் விட்டு அதன் மூலமாக வருகிற பணத்தை வைத்து கடைகள் கட்டி நகராட்சியின் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இதுபோன்று கன்டோன்மென்ட் பகுதியில் 10 கடைகளுக்கு உரிய இடத்தை ஏலம் விட்டு அதிலே வந்த பணத்தை வைத்து இன்றைய தினம் பெருத்த அளவில் 10 கடைகள் கட்டி, மாதம் ஒன்றுக்கு அந்த 10 கடைகள் மூலமாக 5 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக கன்டோன்மென்டிற்கு வருவாய் வருவதை அரசு ஆராய்ந்து, அதுபோன்ற நடவடிக்கையை தமிழகம் முழுவதிற்கும் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு இன்னொரு இடத்தில் கட்டடம் கட்டலாம் என்று சொல்கிறார்கள். இடத்தை விற்று கட்டடம் கட்டுவதும் ஒன்றுதான், கடனாக வாங்கி கட்டடம் கட்டி கடனை அடைப்பதும் ஒன்று தான். எனவே இப்போது எந்த இடத்தையும் விற்பதாக அரசுக்கு உத்தேசம் இல்லை.

சென்னை மாநகராட்சியில் கட்டப்படும் புதிய கடைகள்.

631—(* வினா எண். 8969)—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் மாநகராட்சி சார்பில் எந்தெந்த இடங்களில், எத்தனை கடைகள் கட்டப்படுகின்றன?